

ALPHA MIND POWER™

“Power of the Subconscious Mind”

Newsletter

MAY 2015

My dear Alpha Siddha,

I am sure this newsletter finds you in good health and good cheer.

I would like to pen down here some impressions that form in my mind when I talk to Alpha Siddhas in the class. This may also give you some clarity about your goals.

In a class, one gentleman spoke to me. He said his son who is 35 years old has settled abroad and has a very good career. He is refusing to get married. No matter how much he and his wife tried, they could not convince him to come down and get married. But he refused, saying he was not interested in getting married.

Later, fearing that he may be in love with someone, they even told him he can marry any lady of his choice from any country. But, even then, he said he was not interested in marriage as he was too busy with his career. He was seeing many of his colleagues suffering (!) after marriage and hence he wanted to be free and follow only his career.

The father related all this to me and requested me to bless his son to get married soon. I was a little skeptic. A 35 year old man holding a very responsible position in a multinational company knows what he wants, or for that matter, what he does not want. If he does not wish to marry, then I think we should respect his decision. Will it be right to bless him to get married?

I asked the father whether he had spoken to his son’s subconscious mind. He said he and his wife had been doing that for the past one year and still the son had not relented. Now, it was obvious that his son was very clear in his decision. At this point in life, he was absolutely sure he did not want to get married. He may have his own reasons. But he was very clear.

So it would be right for anyone to interfere and spoil his mental peace? Would it be right to visualize that he is married and possibly create some confusions in his mind? Would it be right for anyone to meditate for something which he really did not want?

The answer I found was ‘NO”. And, this is the mistake many people make. In particular, parents always have their own priorities and concepts about life. They feel they are right in meditating for their children and creating certain situations in life for them. This is fine when it is a small child who cannot make decisions in life. But, for a grown up man who is 35 years old, and who knows his way around in the world, this may not be right. I think he has a right to make a choice about his life.

It took me some time to explain to the father that at this point it would be better for him to simply visualize that his son is happy wherever he is and whatever he is doing. It will be better not to impose marriage or any other life changing decisions on him.

And, this is a very important message for everyone. Knowing what to do is fine. But it is very important to also know when to do it and whether to do it at all. So, dear Alpha Siddhas, by all means meditate for your family members. But make sure to find out what they really want and then continue. Your intention is only to see them happy in life.

To this effect you can always add this sentence when you meditate for others **‘Let this or something better manifest in their life and make them very happy’.**

Blessings to you and all your near and dear ones,

Srimatha (Dr. Viji Panthaiyan)

என் அருமை ஆல்ஃபா சித்தரே,

இந்த செய்திக் கடிதம் வரும் நேரம் நீங்கள் சந்தோஷத்துடன் ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள் என நம்புகிறேன்.

வகுப்புகளில் சில ஆல்ஃபா சித்தர்களுடன் பேசும்பொழுது ஏற்படும் எண்ணங்களை இங்கு எழுத விரும்புகிறேன். இது உங்கள் இலட்சியங்கள் பற்றி ஒரு தெளிவை உங்களுக்கும் கொடுக்கும்.

ஒரு வகுப்பில் ஒருவர் என்னிடம் பேசினார். அவரது 35 வயது மகன் மிக நல்ல உத்தியோகத்தில் வெளிநாட்டில் இருந்தார். அவர் திருமணம் செய்ய மறுத்து வந்தார். இவரும் இவரது மனைவியும் எவ்வளவோ எடுத்து சொல்லியும் அவர் இங்கு வந்து திருமணம் செய்து கொள்ள மறுத்துவிட்டார். தனக்கு திருமணத்தில் விருப்பம் இல்லை என்று அடித்து சொல்லிவிட்டார்.

ஒருவேளை அவர் வேறு நாட்டுப்பெண்ணை காதலிக்கிறாரோ என பயந்து எந்தப் பெண்ணை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள் என்றும் சொல்லிவிட்டார்கள். அப்பொழுதும் தான் வேலையில் மிகவும் பிஸியாக இருப்பதால் திருமணத்தில் நாட்டமில்லை என்று கூறிவிட்டார். அவரது நண்பர்கள் பலர் திருமணத்திற்குப் பின் மிகவும் கஷ்டப்படுவதைப் பார்த்ததால் தான் சுதந்திரமாக இருந்து வேலையில் கவனம் செலுத்த விரும்புவதாகவும் கூறினார்.

இப்பொழுது இந்த குறையெல்லாம் சொல்லி தனது மகனுக்கு விரைவில் திருமணம் நடக்கவேண்டும் என்று ஆசீர்வதிக்குமாறு கேட்டுக்கொண்டார். எனக்கு சற்று தயக்கமாக இருந்தது. 35 வயது நிரம்பிய, பொறுப்பான உத்தியோகத்தில் உள்ள ஒரு ஆணுக்கு தனக்கு என்ன வேண்டும் என்பதும் என்ன வேண்டாம் என்பதும் நிச்சயம் தெளிவாகத் தெரியும். அவர் திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லை என்றால் அவரது முடிவை நாம் மதிக்கத்தான் வேண்டும். அவருக்கு திருமணம் நடக்கட்டும் என ஆசீர்வதிப்பது சரியாகுமா?

மகனது ஆழ்மனதுடன் பேசுகிறீர்களா எனக் கேட்டேன்? அவரும் மனைவியும் ஒரு வருடமாக பேசி வருவதாகவும் இருப்பினும் மகன் கொஞ்சமும் மாறவில்லையென்றும் கூறினார். அவரது மகன் தனது முடிவில் மிகவும் தீவிரமாக உள்ளார் என்பது புரிந்தது. வாழ்வின் இந்த தருணத்தில் நிச்சயம் திருமணம் வேண்டாம் என்பதில் அவர் மிகத் தெளிவாக இருந்தார். அதற்கு அவர் மனதில் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் அவர் மனம் தெளிவாக இருந்தது. அவரது மனநிம்மதியை நாம் கெடுப்பது நியாயமா? அவரது திருமணம் நடப்பது போல் தியானத்தில் பாரத்து அவரது மனதில் குழப்பத்தை உண்டாக்குவது சரியா? உண்மையிலேயே அவர் விரும்பாத ஒன்றிற்காக மற்றவர் யாரேனும் தியானம் செய்வது நியாயமா?

எனக்கு கிடைத்த பதில் 'கூடாது'. இந்த தவறை தான் பலர் செய்கிறார்கள். குறிப்பாக பெற்றோர்களுக்கு வாழ்க்கையைப் பற்றி அவர்களுக்கே உரித்தான சில கருத்துக்களும் முக்கியத்துவமும் உண்டு. தங்களது குழந்தைகளுக்காக தியானம் செய்து அவர்கள் வாழ்வில் சில சூழ்நிலைகளை உருவாக்குவது சரி என்றே நினைக்கிறார்கள். முடிவுகள் எடுக்கத் தெரியாத சிறுவயது குழந்தை என்றால் இது சரியாக இருக்கும். ஆனால் 35 வயது நிறைந்த உலகத்தை புரிந்த ஒருவருக்கு இது சரியாக இருக்காது. தனது வாழ்வை பற்றிய முடிவை எடுக்க அவருக்கு நிச்சயம் உரிமை உண்டு.

சற்று நேரம் பேசி அந்த தந்தைக்குப் புரிய வைத்தேன். இத்தருணத்தில் தனது மகன் எங்கிருந்தாலும் எப்படியிருந்தாலும் சந்தோஷமாக இருப்பது போல் பார்ப்பது தான் சிறந்தது. திருமணம் அல்லது அவரது வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தும் எந்த முடிவுகளையும் அவர் மீது திணிக்காமல் இருப்பதே சிறந்தது என்பதையும் விளக்கினேன்.

இது அனைவருமே புரிந்து கொள்ள வேண்டிய ஒரு கருத்து தான். என்ன செய்ய வேண்டும் என அறிந்திருப்பது நல்லது தான். ஆனால் அதே சமயம் அதை எப்பொழுது செய்ய வேண்டும் அல்லது அவசியம் செய்ய வேண்டுமா என்பதும் தெரிந்திருக்க வேண்டும்.

ஆக, ஆல்ஃபா சித்தர்களே, நிச்சயம் உங்கள் குடும்பத்தினருக்காக தியானம் செய்யுங்கள். ஆனால் அவர்கள் உண்மையிலேயே என்ன விரும்புகிறார்கள் என்பதை தெரிந்து கொண்டபின் அதை செய்யுங்கள். அவர்களது சந்தோஷத்தை தானே நீங்கள் நாடுகிறீர்கள்?

அப்படி மற்றவருக்காக தியானம் செய்யும்பொழுது கீழ்கண்ட வாக்கியத்தை சேர்த்துக் கொள்ளுங்கள் **'இந்த விஷயமோ அல்லது இதைவிட சிறப்பானதோ நடைபெறட்டும், அவரை மகிழ்விக்கட்டும்'.**

உங்களுக்கும் உங்களை சேர்ந்தவர்களுக்கும் எனது ஆசீர்வாதங்கள்.

ஸ்ரீமாதா (Dr. விஜயலக்ஷ்மி பந்தையன்)

# ALPHA FEEDBACK – ஆல்ஃபா அனுபவங்கள்

நான் ஆல்ஃபா தியானத்தில் 3 கட்டங்கள் முடித்துவிட்டேன். என்னுடைய இலட்சியங்கள் பல நிறைவேறியுள்ளன. ஆனால் என் வீட்டிற்குள் நுழையும்பொழுதே எனக்குள் ஏதோ ஒரு சங்கடம் ஏற்பட்டது. நானும் எவ்வளவோ தியானம் செய்தபொழுதும் அந்த நிலை மாறவேயில்லை. குருஜியின் ஆலோசனைப்படி **'சைகிக் எனர்ஜி'** வகுப்பில் கலந்து கொண்டேன். வகுப்பில் குருஜி சொல்லிகொடுத்தபடி எலுமிச்சை 3 நாட்கள் தொடர்ந்து என் வீட்டில் வைத்தேன். அடுத்த சில நாட்களிலேயே என் வீட்டின் சூழ்நிலை முற்றிலும் மாறி இப்பொழுது என் குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆல்ஃபாவிற்கும், குருஜிக்கும் நன்றி!

**ஆல்ஃபா சித்தர் – சென்னை**

எனக்கு பொருளாதார ரீதியாக பல பிரச்சினைகள் ஏற்பட்டன. நான் ஆல்ஃபா தியானத்தில் **'அக்னி குண்டம்'** வகுப்பில் கலந்து கொண்டேன். அந்த வகுப்பில் பொருளாதார ரீதியாக எனக்குள் ஏற்பட்டிருந்த அடைப்பு தெரிந்தது. என்னிடம் பணம் அதிகமாக இருந்தால் என்னுடைய உறவினர்கள் பொறாமைப்படுவார்கள் என்ற எண்ணம் எனக்குள் இருப்பது தெரிந்தது. இந்த எண்ணத்தை அக்னியில் இட்டு பொசுக்கிவிட்டேன். இப்பொழுது என்னுடைய பொருளாதார நிலை உயர்ந்துள்ளது. ஆல்பாவிற்கும், குருஜிக்கும் நன்றி! **ஆல்ஃபா சித்தர் – புதுவை**

எனக்கு திருமணம் நிகழ்வதில் பல தடைகள் இருந்துவந்தன. என்னுடைய ஜாதகத்தில் ஏதோ பிரச்சினை இருப்பதால் திருமணத்தில் தடை இருப்பதாக சொன்னார்கள். நான் **'மந்திர சக்தி'** வகுப்பில் கலந்துகொண்டேன். குருஜியின் அறிவுரைப்படி நவக்கிரகஹ தோஷம் நீக்கும் மந்திரங்கள் சொல்லி வந்தேன். இதை தொடர்ந்து செய்துவந்தேன். இப்பொழுது எனக்கு ஜாதகம் பற்றிய பயம் நீங்கிவிட்டது. குருஜிக்கும், ஆல்ஃபாவிற்கும் நன்றி! **திரு. ராமு – வேலூர்**

எனக்கு திருமணமாகி ஒரு வருடம் ஆகிறது. இருந்தாலும் என்னுடைய புகுந்த வீட்டினர் விருப்பத்திற்கேற்ப என்னால் குடும்பத்தை சரிவர நிர்வகிக்க முடியவில்லை. இதற்கு காரணம் நான் பிறந்த வீட்டில் மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டதுதான். குடும்பப்பொறுப்பை கவனிக்கும் ஆசை எனக்கிருந்தாலும் என்னால் அதை சரிவர செய்யமுடியவில்லை. பிறகு ஆல்ஃபா தியானப் பயிற்சியில் கலந்து கொண்டு என்னுடைய ஆழ்மனதுடன் பேசிவந்தேன். எனக்குள் இருந்த திறமைகளை வெளிகொண்டு வந்தேன். என் நாத்தனார் திருமணத்தைக் கூட நான்தான் முன்நின்று நடத்திவைத்தேன். இதற்கு காரணம் ஆல்ஃபா தான். ஆல்ஃபாவிற்கு நன்றி! குருஜீக்கு நன்றி! **ஆல்ஃபா சித்தர் – திருச்சி**

I have completed 3 levels in Alpha Mind Power. Many of my goals have manifested. But I always felt very uncomfortable when I entered my house. Although I meditated regularly, this did not change. As per Guruji's advice I attended **'Psychic Energy'** class. As Guruji taught in the class for 3 days I kept lemons to remove negativities from the house. The entire atmosphere of the house changed within the next few days. Today, my family is very happy. Thanks to Alpha and Guruji! ***Alpha Siddha, Chennai***.

I had many financial problems. I joined '**Agni Kundam'** class. I could recognize the blockage in my financial growth. I could understand that there is a thought within me that if I had more money my relatives will feel jealous of me. I burnt this thought form in the fire. Now my financial situation is much better. Thanks to Alpha and Guruji!

***Alpha Siddha, Pondy.***

There were many hurdles in my getting married. They said there is something wrong with my horoscope and that is why marriage was getting postponed. I joined **'Mantra Shakthi'** class. I started chanting Navagraha Shanthi mantras given by Guruji. Now I am not worried about my horoscope. Thanks to Guruji! ***Mr.Ramu, Vellore.***

I got married one year back. But I was not able to manage the house to the satisfaction of my in-laws. This was because I was very much pampered in my parents' house. Although I wished to take care of my family, I was unable to do it properly. Then I joined Alpha Mind Power class and started talking to my subconscious mind. This brought out all the talents which were within me. I was even able to conduct my sister-in-law's wedding. This was possible only due to Alpha. Thanks a million to Alpha!

***Alpha Siddha, Trichy***.

## Alpha Music Therapy!

It is now 5 years since our Guruji introduced Alpha Music Therapy! Hundreds have already benefitted by this therapy. This is a treatment which creates the change that one wants in his mind. Many have been able to get rid of negative thoughts completely. Suicide tendencies have disappeared! Children have been able to study very well after this treatment! Alcoholics have totally given up alcohol! All this with just this Alpha Music Therapy!

You may contact AMP office for details and appointment.

## ஆல்ஃபா மியூசிக் தெரபி!

குருஜி அவர்களால் ஆல்ஃபா மியூசிக் தெரபி துவங்கப்பட்டு 5 வருடங்களாகின்றன. நூற்றுக்கணக்கானவர்கள் இதனால் பயனடைந்திருக்கிறார்கள். அவர்கள் விரும்பும் மாற்றத்தை மனதில் உருவாக்கும் இந்த இசை சிகிச்சை. பலர் மனதிலிருந்து எதிர்மறை எண்ணங்கள் நீங்கிவிட்டன. தற்கொலை எண்ணம் கூட முழுவதுமாக மறைந்துவிட்டது. இந்த இசை சிகிச்சைக்குப் பிறகு மாணவர்களால் நன்றாக படிக்க முடிகிறது. குடிப்பழக்கத்தை முற்றிலும் துறந்திருக்கிறார்கள். இத்தனை மாற்றங்களும் இந்த இசை சிகிச்சை பெறுவதன் மூலம் கிடைத்துவிடுகின்றது!

மேற்கொண்டு விபரங்களுக்கு AMP அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.



*Guruji with Alpha Siddhas at*
*Srividya Workshop in Chennai*



*Guruji with Alpha Siddhas at*
*Swami Dayanand Saraswathi Ashram, Rishikesh*

## ‘சாந்தக்னி – மனதை தூய்மைப்படுத்து’

குருஜி அவர்கள் **‘சாந்தக்னி – மனதை தூய்மைபடுத்து’** என்ற பெயரில் 5 நாள் தியான வகுப்பை ரிஷிகேஷில் நடத்த உள்ளார் என்பதை அறிவிப்பதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறோம்.

**தேதி** : *07.09.2015* முதல் *11.09.2015*,
**இடம்** : ரிஷிகேஷ் ஆசிரமம்

இந்த வகுப்பு ஆங்கிலம் மற்றும் தமிழிலும் நடத்தப்படும். மேலும் விவரங்கள் அறிய மற்றும் உங்கள் பெயரை பதிவு செய்ய AMP அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

### Watch Guruji's TV Programs!

| | |
|---|---|
| Makkal TV | : Saturday 9.00 am |
| Sankara TV | : Sunday 9.30 am |
| Pothigai TV | : Monday 1.30 pm |

Watch our Guruji's TV programs also on our Website
www.alphamindpower.net

## ‘SHANTAGNI’ – Reprogram your mind

We are very happy to announce that Guruji will be conducting a 5 days meditation session ‘Shantagni – Reprogram your mind’ at Rishikesh.

Dates: 7th to 11th September 2015.
Venue: Rishikesh Ashram

The program will be bilingual in English and Tamil. For further details and to register your name, please contact AMP office.